RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s838

# தமிழர் பண்பாட்டு கூறுகளில் சமகால மாற்றங்கள்

**பொ. லதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ்.எஸ்.கே.வி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா

# Contemporary Changes in Tamil Cultural Components

**P. Latha** [a, *]

[a] Department of Tamil, SSKV Women College, Kanchipuram-631502, Tamil Nadu, India

* Corresponding Author:
Dheena051981@gmail.com

Received: 18-04-2021
Revised: 03-05-2022
Accepted: 26-05-2022
Published: 21-07-2022

Check for updates

**ABSTRACT**

Tamils divide life into two parts, internal and external. They divided the life of the thalaivan and thalaivi's love affairs that happen together as internal and political life and Socio-economic conditions as external. That's why Valluvar has divided it threefold: virtue, pleasure, and charity. If there is to be happiness and peace in life, everyone should impose certain duties and morals on themselves. Such duties and restrictions are called morals. Sanga literary bioethics serve as universal cultural guides that can be used to make life high and pleasant. These morals are eternal and are common to the entire world. The purpose of this study is to study the changes in the lifestyle and culture of the Tamilians who are living in this era, forgetting such high cultural norms.

**Keywords:** Mother, Marriage, Moral, Charity

## முன்னுரை

தமிழர் வாழ்க்கையை அகம் புறம் என இரு கூறாகப் பகுத்து கூறுகின்றனர். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் கலந்து அன்போடு வாழும் வாழ்வை அகம் என்றும் அரசியல் வாழ்வை புறம் என்றும் வகுத்தனர் தமிழரின் வாழ்வில் அடிப்படையாக அமைந்தவை அறம் பொருள் இன்பம் ஆகும். ஆகையால் தான் வள்ளுவரும் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என முப்பாலாகப் பிரித்துரைத்துள்ளார்.

பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவது எளியாரிடத்தும் இனிதாகப் பேசுவதும் புதிதாய் வந்த ஒழுக்கமுள்ள அயலாரை விருந்தோம்புவதும் இரப்போர்க்கிடுவதும் இயன்றவரை பிறருக்கு உதவுவதும் கொள்கையும் மானமும் கெட்டால் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகளாம்.

அறவழியில் பொருளை ஈட்டி அப்பொருளால் இன்பம் நுகர்தல் தமிழரின் பண்பாடாக இருந்தது. ஆகையால் இக்கட்டுரையில் பண்பாடு என்பதன் பொருள் அகவாழ்வுக் கூறுகள் திருமணம் விருந்தோம்பல் இல்வாழ்க்கை போன்றவை குறித்தும் இம்முறைகளில் சமகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் காண்போம்.

## பண்பாடு என்பதன் பொருள்

பண்பாடு என்பது பண்படு என்னும் சொல்லிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது. பண்படுத்தப்பட்ட

நிலமே நற்பொருள்கள் விளைய இடனாக அமையும் அதுபோல பக்குவப்பட்ட மனிதனையும், பண்பட்ட மனிதன் என்பர். பண்பாடு என்பது நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளல் என்னும் பொருளினை உடையதாகும். செம்மைப்படுத்துதல் என்னும் பொருளும் ஏற்புடையதாகும். நிலத்திற்கும், உள்ளத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்ற உண்மையை அறிந்த தமிழர் இரண்டையும் 'புலன்' என்ற சொல்லால் குறித்தனர்.

புலவர்கள் மக்களின் உள்ளம் என்னும் நிலத்தைத் தம்முடைய கவிதையாகிய ஏரினைக் கொண்டு உழுது அறிவு என்ற விதையை விதைத்து 'பண்பாடு' என்னும் பயிரை வளர்ப்பவர்கள் என்பதால் தான்

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க

சொல்லேர் உழவர் பகை"

என்று வள்ளுவர் குறள் எண் -872-ல் அன்றே கூறியுள்ளார் (Parimelalhagar, 2002).

## அகவாழ்வு கூறுகள்

உள்ளத்தால் பண்பட்ட மக்களின் அக வாழ்வினை எழுவகையாக நம் முன்னோர் வகுத்தனர்.

"அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை

பெருந்திணை என எழு பெற்றித்தாகும்"

நம்பியகப் பொருள் -நூற்பா-1-ல் ஐந்திணை கைக்கிளை பெருந்திணை என்று ஏழாக கூறினர் (Ramasubramanian, 2000). தலைவன் தலைவி இருவரும் இல்லத்திலிருந்து நல்லறம் செய்வதற்கு அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணர்ச்சியை ஐந்து திணையாக வகுத்தனர் தலைவன் தலைவி இருவரும் கூடி மகிழ்தல் தலைவன் உலகியல் கடமையை நோக்கி சிலநாள் தலைவியை பிரிந்து செல்லுதல் தலைவன் வரும்வரை தலைவி ஆற்றியிருத்தல் தலைவன் வந்த பிறகு தலைவி ஊடல் கொள்ளுதல் என ஐந்து திணைக்குரிய ஒழுகலாறுகளை வகுத்தனர். குறிஞ்சித்திணை -புணர்தல் பாலைத்திணை -பிரிதல் முல்லைத்திணை -ஆற்றியிருத்தல் நெய்தல் திணை -இரங்குதல் மருதத்திணை -ஊடல் என்னும் பெயரால் வகுத்துரைத்தனர்.

மேலும் ஐந்திணையின் ஒழுக்கத்தை களவு கற்பு என்று இரண்டாகப் பிரித்தனர். நல் ஊழின் காரணமாக தலைவனும் தலைவியும் சந்திக்க நேரிட்டபோது இருவரின் அன்பும் ஒன்றாக கலந்து உலகத்தார் அறியாது மறைந்து ஒழுகும் ஒழுக்கத்தை 'களவு' என்றும் அவ்வாறு இருந்த தலைவன் தலைவி பெற்றோரின் உடன்பாட்டுடன் உலகறிய திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவதை 'கற்பு' என்று கூறினர்.

தலைவன் தலைவி இருவருள் ஒருவர் மட்டும் அன்பினால் கூடி வாழ்தலில் விருப்புடையவராக இருந்து மற்றவர் அவர் உறவில் விருப்பம் இல்லாமல் வாழ்வதை கைக்கிளை என்றனர். கைக்கிளை என்பது ஒருதலைக் காமம் ஆகும்.

தலைவனும் தலைவியும் தம்முள் அன்பு இல்லாதவராய் இருந்தும் பிறவால் பிணைக்கப்பட்டு அன்பின்றி வாழ்தலை பெருந்திணை என்றனர். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் ஆகும்.

## திருமணம்

மணற்கேணியினைத் தோண்டத் தோண்ட நீர் ஊறும். அதுபோல கணவன் மனைவி என்னும் உறவு பன்னாள் பழகப் பழகச் சிறந்த அன்பு தோன்றிப் பெருக வேண்டும். அதுவே வாழ்வின் பயனாக இருக்கும்.

பண்டையத் திருமணம் என்பது மிகவும் எளிமையானது. சடங்குகள் தீ வலம் வருதல் மந்திரம் ஓதுதல் எதுவும் இல்லாதது. அவர்களின் திருமண முறையில் எளிமை இனிமை அன்பு பண்பு

நிறைந்ததாக விளங்கியது. சமயச் சடங்குகளின்றி நடத்தப்பட்ட முறையே அவர்களின் உள்ளப் பண்பாட்டை உணர்த்தியது.

சங்ககாலத் திருமணம் காதல் திருமணம் நடந்து வந்ததென்பதையே சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றது. காதல் கொள்வதற்கு அவர்களுக்கு எவையும் தேவைப்படவில்லை. சாதியோ இனமோ முன்பின் அறிமுகமோ உறவோ தாய்தந்தையின் விருப்பமோ உற்றாரின் இசைவும் வேண்டப்படவில்லை அன்புடை நெஞ்சங்களின் இணைவு ஒன்றுதான் தேவையாக இருந்தது.

"யாயும் ஞாயும் யாரா கியாரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே"

என்னும் குறுந்தொகைப் பாடல்-40 தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதற்குப் பிற்பட்ட காலத்தில் பலரறி மணத்தைச் சான்றோர் வகுத்தனர் என்று தொல்காப்பியர் கூறுகிறார் (Somasundranaar, 2007).

"பொய்யும் வழுவும் தோன்றியப் பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

நாகரிகம் வளர வளர அகவாழ்வில் ஒழுங்கும் நியதியும் படிப்படியாகத் தோன்றத் தொடங்கின என்பதை இது காட்டுகிறது (Subramanian, 2008).

பண்டைய காலத்தில் இவ்வாறு திருமணம் நடந்தது. ஆனால் சமகாலத்தில் நடைபெறும் திருமண முறையோ வேறுவிதமானது வரதட்சணை கொடுத்தால் மட்டுமே திருமணம் நடைபெறுகின்றது. கணவன் மனைவியிடையே உண்மையான அன்பு இல்லை. செம்புல பெயல்நீர் போல அன்பு ஒன்றுவதில்லை என்பதை

"இன்றைய கண்ணகிகளில்

கதையோ பரிதாபமானது

அவர்களை கோவலர்களே வந்து

கொளுத்துகிறார்கள்"

என்னுடைய போதிமரங்கள் -பக்கம் -54-ல் வரதட்சனைகள் கொடுமைகளால் எத்தனையோ பெண்கள் தீயில் கருகுகின்றனர் என்பதை மு. மேத்தா சுட்டுகிறார் (Metha, 1987).

"சீர் கொண்டு வா என்று

இராமர்கள் விரட்டியதால்

பிறந்த வீடுகளிலே

தவமிருக்கும்

அசோக வனத்துச் சீதைகள்"

புள்ளிகள் -பக்கம் -44 வரதட்சணை வந்து சேரவில்லை என்பதால் கணவன் துரத்தியதால் பிறந்த வீடுகளில் மறுவாழ்வுக்காக காத்திருக்கும் பெண்களின் நிலையினை கவிஞர் அறிவுமதி சுட்டுவது சிந்திக்கதக்கதாகவே உள்ளது (Arivumathi, 2000).

"போதைப் பொருளாகவும்

போகப் பொருளாகவும்

புரிந்து கொண்டதல்லாமல்

வேதப் பொருளாக்கி

மேன்மை தர யாருமில்லை

அடிமை ஒப்பந்தத்தின்

அடையாளமாகத்தான்

கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தனர்

அது கனத்தது வலித்தது

கண்ணிணை நனைத்தது"

ஊர்வலம் -பக்கம் -72 என்ற கவிதையின் வாயிலாக பெண்ணிற்குத் தாலி என்பது வேலியாக இல்லாமல் அடிமையின் அடையாளமாகத்தான் உள்ளது என்பதை குறிப்பிடுகிறார் (Metha, 1987).

"தாம்பத்தியம் என்பதெல்லாம்

வெறுங் கனவாய் போகிறது

பொய்யே தேசத்தின்

பொது மொழியாய் மாறியது"

என்னுடைய போதிமரங்கள் -பக்கம்-10 இக்காலத்தில் உண்மையான புனிதமான தாம்பத்திய வாழ்க்கை என்பதெல்லாம் இல்லாமல் பொய்யான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்ற கருத்தை எடுத்துரைப்பது நோக்கத்தக்கது (Metha, 1987).

## இல்லறம்

சங்ககால தமிழரின் வாழ்க்கை எளிமையும் இனிமையும் நிறைந்ததாக இருந்தது. வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் உணர்வு உடையவர்களாக இருந்தனர். வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் சிறப்பு வாய்ந்தன இக்கால புதுமைப் போக்கு உடையன. சங்க காலத் தமிழ்மக்கள் தம் வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டினர் அதற்குரிய சிறந்த கருவி 'இல்வாழ்க்கை' என்பதை உணர்ந்திருந்தனர். கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இணைந்து வாழ்வதே இல்வாழ்க்கை அவர்களிடையே தோன்றிய காதல் உறவினரிடையே அன்பாக மலர்ந்து பிற உயிர்களிடத்து அருளாகக் கனிந்தது.

"அன்பு அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

என்று குறள் எண்-45ல் இல்வாழ்க்கையின் சிறப்பினை வள்ளுவர் கூறுகிறார் (Parimelalhagar, 2002). அறவழியில் பொருளை ஈட்டி அறவோர்க்கு அளித்தலும் அந்தணரை ஓம்பலும் துறவிகளைப் பேணுதலுமே இல்லறத்தின் கடமைகளாகக் கருதப்பட்டது.

மகளிர் அன்பின் தலை ஊற்றாய் விளங்கினர். இல்வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு தேவைப்படும் அன்பை பெருக்குவதற்கு உரிய வாயிலாக பெண்கள் விளங்கினர். இல்வாழ்க்கையில் தலைமையிடத்தை பெண்ணே பெற்றிருந்தால். அவள் அடக்குமுறைக்கு ஆளாகி துன்பப் படவில்லை, தனி உரிமையோடும் சுய சிந்தனையோடும் விளங்கினாள். குடும்ப வாழ்க்கையில் தலைவனுக்கு நிகராக தலைவி விளங்கினாள். இல்லத்தரசியரை வாழ்க்கையின் சுமையாக அக்காலத் தமிழர்கள் கருதவில்லை. இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்கள் பாராட்டப்பட்டனர். சங்க காலத்தில் குடும்ப பெண்கள் மதிப்பு மிக்கவர்களாகவும் சிறப்பு மிக்கவர்களாகவும் போற்றப்பட்டனர்.

இராமபிரான் சீதையைத் தவிர வேறு ஒரு பெண்ணை விரலாலும் தொடமாட்டேன் என்று கூறியதாக தன் இல்லறத்தின் மாண்பை எடுத்துரைத்தார் ஆனால் இன்றைய நிலையோ வேறானது.

"வைர அட்டிகையும் வரதட்சணை பாக்கிகளும்

உன்னுடைய தந்தை வந்து

உடனே தராவிட்டால் தோகையே

உனைத் தொடமாட்டேன் என்று

இளைஞர்கள் சொல்வது

இன்றைய இல்லறம்"

காத்திருந்த காற்று -பக்கம்.44 கணவன் மனைவியின் மீது ஆசை கொள்ளாமல் தான் கொண்டு வரும் வரதட்சணையின் மீது ஆசை கொண்டிருக்கும் இன்றைய இளைஞர்களின் அறம் எவ்வாறு மேன்மையுற்றிருக்கும் என்பது சிந்திக்கத்தக்கதாக உள்ளது (Metha, 1982).

## விருந்தோம்பல்

இல்வாழ்க்கையில் தலையாயக் கடமையாக விருந்தோம்பல் விளங்கியது தன்னை நாடிவரும் விருந்தினரை அன்புடன் வரவேற்று விருந்தளித்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக தேவைபடுவது பொருள் என்பதை பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனால்தான் அவர்கள் பொருளை ஈட்டுவதில் பேரார்வம் காட்டினர். பண்டையத் தமிழர் விருந்தோம்பலை சிறந்த ஓர் அறமாக போற்றினர் என்பதை அவர்களுடைய நிகழ்ச்சிகளிலிருந்து தெளியலாம். சங்கப் பாடல்கள் இத்தகைய நிகழ்வுகள் பலவற்றினை சிறந்த ஓவியங்களாக தீட்டிக் காட்டுகின்றன.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று விருந்தோம்பல் பண்பினை குறள் எண்-81ல் வள்ளுவர் விளக்கியுள்ளார் (Parimelalhagar, 2002).

"நம் அண்டை வீட்டு

சீதைகளோ

அடுப்படியில்

ரகசிய கூட்டம் போட்டு

வந்த விருந்தை

அனுப்புவதெப்படி என்று

ஆலோசனை செய்கிறார்கள்"

காத்திருந்த காற்று -ப.33ல் மாறிவரும் காலச் சூழலில் பண்பாடு கலாசாரம் தமிழரின் வாழ்வியல் முறை ஆகியவற்றை மறந்த காரணத்தாலும் சில வீடுகளில் பெண்கள் இவ்வாறு நடந்துக் கொள்கிறார்கள் (Metha, 1982).

சீதை இராமனை பிரிந்திருந்த காலத்தில் விருந்தினர் வந்தால் இராமன் அவர்களுக்கு உபசரிக்க முடியாமல் வருந்துவாரே என்று கவலையுற்றவள் சீதை ஆனால் இன்றைய சீதைகளோ விருந்தினரை விரட்டியடிக்கும் வழிகளைப் பற்றி யோசிக்கின்றனர் என்பதை சுட்டுகிறார்.

"இல்லறத்தில் இன்பமில்லை

துறவறத்தில் உண்மையில்லை

நல்லறத்தைப் பேண

நாதியில்லை

சொந்த உறவுகளோ

சொத்துக்கே சுத்துகிறார்

மனிதர் வாழ்வை மனிதர் பறிக்கும்

வழக்கம் இங்கே தான்"

என்னுடைய போதிமரங்கள் -ப-38ல் என்ற வரிகளில் எந்த இடத்திலும் உண்மையும் இல்லை. சொத்துக்காக அண்ணன் தம்பியே அடித்துக் கொல்லும் நிலை இந்நாட்டில் நிலவுகிறது என்று மு. மேத்தா. தம் ஆதங்கத்தை வெளிப்படுத்தியது உணரத்தக்கதாகவே உள்ளது (Metha, 1987).

## முடிவுரை

மக்கள் அனைவராலும் விரும்பப்படுவது இன்பம் அவ்வின்பத்திற்குக் காரணமாக இருப்பது பொருள். அப்பொருளை அறவழியில் ஈட்டி தானும் உண்டு பிறருக்கும் கொடுத்து மகிழ்ச்சியாக வாழ்ந்தவர் அன்றைய கால மக்கள் இந்நிலை சமகாலத்தில் மாற்றம் கொண்டுள்ளது. இன்பமாக வாழ பொருள் தேவை என்பதால் அதனை எந்த வழியினும் பெறலாம் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். பண்பாடு சிதைந்த நிலையில் வாழ்கின்றனர். இந்நிலை மாறி சங்கத் தமிழர்களின் பண்பாடுகளை உள்வாங்கி வாழ்ந்து தனிச் சிறப்பு வாய்ந்த பண்பாட்டை வளர்க்க வேண்டும்.

## References


Arivumathi, (2000) Pulligal, Subanayagam Press, Chidambaram, India.

Metha, M., (1982) Kaathiruntha Kaatru, Kavitha Pathippagam, Chennai, India.

Metha, M., (1987) Ennadudaiya pothi marankal, Kavitha Pathippagam, Chennai, India.

Metha, M., (1987) Oorvalam, Kavitha Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Ramasubramanian, V.T., (2000) Nambiyagap Porul, Mulai Nilaiyam, India.

Somasundranaar, P.V., (2007) Kurunthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subramanian, S.V., (2003) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License